**தெங்கு ஆராய்ச்சி சபை - 2018**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தெங்கு ஆராய்ச்சி சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து, தெங்கு ஆராய்ச்சி சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழி அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியானதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவனத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக்

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு ஆளுகையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

### 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 07 ஆம் இலக்க நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளிற்கு ஒரு முறை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 1,522,283,874 கிரயமான காணி மற்றும் ரூபா 210,074,759 கிரயமான கட்டிடங்கள் 2005 ஆம் ஆண்டின் பின்னர் மீள்மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. | தற்போது இக் கட்டிடங்களிற்கான மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நியமத்தின் பிரகாரம் குறித்த சொத்துக்கள் மீள்மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) நியம இல. 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம், முழுமையாகத் தேய்விடப்பட்டுள்ள ரூபா 61,901,689 கிரயமான 126 வாகனங்கள், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்திருந்த போதிலும், அச்சொத்துக்களின் பயனுள்ள பொருதார ஆயுட்காலத்தை கருத்திற்கொண்டு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் ஒவ்வொரு சொத்து வகுப்பிலும் அதிக எண்ணிக்கையான சொத்துக்கள் காணப்படுகின்றமையால் இதனை குறுகிய காலத்தில் செய்து முடிப்பது சிரமமானதாகும். ஆகையால், சொத்துக்களின் ஒவ்வொரு வகுப்பினையும் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருக்கின்றேன். | முழுமையாகத் தேய் விடப்பட்டுள்ள சொத் க்கள் மீண்டும் பயன் பாட்டிற்கு எடுக்கப் படுகின்றமையால், அச்சொத்துக்களின் பயனுள்ள பொருதார ஆயுட்காலத்தை கரு த்திற்கொண்டு மீள்ம திப்பீடு செய்யப்படு தல் வேண்டும். |

#### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டில் சபையிலிருந்து அகற்றப்பட்ட சொத்துக்களிலிருந்து ஈட்டப்பட்ட இலாபத்தைக் கணிப்பிடு கையில் அச்சொத்துக்களுடன் தொடர்புடைய ஆண்டுகளிற்கான ரூபா 82,750 பெறுமானத்தேய்வும் ரூபா 1,084,750 பெறுமானத்தேய்வு ஏற்பாடும், கணக்குகளிலிருந்து அகற்றப்படாமையால் மீளாய்வாண் டிற்கான சொத்து | இச்சொத்துக்களின் அகற்றல் வருடத்திற்குரிய பெறுமானத்தேய்வுச் சீராக்கத்தில் தவறு ஏற்பட்டுள்ள மையால் 2019 ஆம் ஆண்டின் கணக்குகளில் அதனைச் சீராக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை அகற்று கையில் அச்சொத்துக் களின் கிரயமும் பெறுமானத்தேய்வு ஏற்பாடும் உரிய கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக் கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அகற்றல் நட்டம் ரூபா 1,167,500 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 1,084,750 ஆல் நிதி நிலைமைக் கூற்றில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) மீளாய்வாண்டிற்குரிய மூலதனச் செலவினமான ரூபா 2,200,000 ஆய்வுகூட உபகரணக் கொள்வனவுகள் மற்றும் ரூபா 9,850,658 வீதியொன்றை கொங்ரீட் இடுதல் என்பன மீண்டுவரும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான இலாபம் ரூபா 12,050,658 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இதனை 2019 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும். | செலவினத்தைக் கணக்கீடு செய்கையில் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினத்தை சரியாக இனங்கண்டு கணக்குகளில் காண்பித்தல் வேண்டும். |
| (இ) நிதிச் செயலாற்றல் கூற்றிலுள்ள பணிக்கொடை ஏற்பாடு ரூபா 39,139,186 ஆன போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு அசைவிற்கு உட்படாத விடயத்தின் கீழ் அது 38,780,938 எனக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் செயற்பாட்டு நடவடிக்கைளிலிருந்து உருவான தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 358,248 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் 07 உத்தியோகத்தர்களிற்கு கூடுதலாகச் செலுத்திய ரூபா 456,979 தொகையான பணிக்கொடை, நிறுவனத்திலிருந்து விலகிச் சென்ற 03 உத்தியோகத்தர்களிற்குச் செலுத்திய ரூபா 601,250 தொகை மற்றும் வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தர் ஒருவரின் பணிக் கொடையினை அவர்களது பிணைகளிற்கு எதிரீடு செய்தமையால் ரூபா 213,978 செலவினத்தை கணக்குகளில் சீராக்கியமையே இந்த வேறுபாட்டிற்கு காரணமாகும். | காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் பணிக்கொடை ஏற்பாடு ரூபா 39,139,186 எனக் காண்பிக்கப்படாது அதற்குரிய சரியான மீதியினை உள்ளடக்குதல் வேண்டும். |

**1.5.3**

**கணக்காய்விற்கான சான்றின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான ரூபா 32,223,012 நானாவிதக் கடன்பட்டோர் மற்றும் ரூபா 1,338,457 நானாவிதக் கடன்கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | சகல கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோருக்கு மீதி உறுதிப் படுத்தல் கடிதங்கள் (Confirmation Letters ) அனுப்பப்பட்ட போதிலும், பெறுமதிகள் உறுதிப்படுத்தப்படவில்லை. | நேரடியாக கணக்காய்விற்கு குறித்த மீதி உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கட்டிடத் திருத்தங்களிற்காக 2012 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 159,936 ஆரம்ப வேலைகளிற்காக முற்பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், குறித்த முற்பணத்தைத் தீர்ப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வல்பிட ஆராய்ச்சி நிலையத்திலுள்ள உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் சுற்றுலா விடுதியினை திருத்துவதற்காக வழங்கப்பட்ட முற்பணமாகும், இது 2012 முதல் காணப்பட்டு வருகின்ற மீதி என்பதனால் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்து அதன் ஆலோசனைக் கமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறிவிக்கின்றேன். | முற்பணங்களை குறித்த நிர்மாண நடவடிக்கைகள் முடிவு ற்றவுடன் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக் கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) நி.பி. 396 (ஈ) | பணிக்கொடைக் கொடுப்பனவு, பேணுகைச் செலவினம் மற்றும் ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கியிருந்த ரூபா 349,040 பெறுமதியான 03 காசோலைகள் 06 மாதங்களிற்கும் மேலாக கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாதிருக்கையில் அது தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் காசோலைகள் கால நீடிப்புச் செய்யப்பட்டு மீண்டும் அந்த நபர்களிற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. இருப்பினும் அக்காசோலைகள் தொடர்ந்தும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாதிருப்பின் குறித்த நபர்கள் அறிவுறுத்தப்பட்டு இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன். | 06 மாதங்களிற்கும் மேற்பட்ட காலங்கட ந்த காசோலைகள் தொடர்பில் நிதிப்பிர மாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ)2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 85(i)(அ) ஆம் பிரிவு | கொடுப்பனவு செய்கின்ற ஆளின் ஊழியரல்லாத வதியும் ஆளொருவருக்கு மேற்கொள்ளப்படுகின்ற சேவைக் கட்டணங்கள் மற்றும் ஒப்பந்தக் கொடுப்பனவுத் தொகைகள் மாதத்திற்கு | இக் கொடுப்பனவுகளிற்காக அறவிடப்பட வேண்டிய நிறுத்தி வைத்தல் வரியினை 2019 ஆம் ஆண்டு முதல் அறவிட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு | குறித்த சட்ட ஏற்பா டுகளின் பிரகாரம் நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறை வரித் திணைக்களத் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 50,000 இற்கு மேற்படுகையில் அக் கொடுப்பனவுகளிலிருந்து 5 சதவீத நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப் பிவைக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் 05 ஆட்களிற்காக 08 சந்தர்ப் பங்கில் செலுத்தியிருந்த ரூபா 7,778,442 சேவைக் கட்டணங்கள் மற்றும் ஒப்பந்தக் கொடுப்பனவு களிலிருந்து ரூபா 388,922 நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்கள த்திற்கு அனுப்பிவைக்கப்பட் டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறிவிக்கின்றேன். | திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். |
| (இ) நி.பி. 756 | ரூபா 3,159,059 பெறுமதி யான நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மெய்மை யாய்வு செய்யப்பட்டிருக் கவில்லை. | நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளிற்கான வருடாந்த மெய்மையாய்வு இவ்வருடம் மேற்கொள்ளப்படும் என்பதனை அறிவிக்கின்றேன். | நிதிப்பிரமாணத்தி ன் பிரகாரம் நூலகப் புத்தகங்களை மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான தொழிற்பாட்டு விளைவுகள் ரூபா 58,993,686 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 26,752,992 ஆகும். அதற்கமைய, நிதி விளைவுகளில் ரூபா 85,746,678 பின்னடைவு அவதானிக்கப்பட்டது. ஆராய்ச்சி நிலையங்களின் வருமானம் ரூபா 28,358,135 ஆம் பின்னடைந்தமை மற்றும் ஆராய்ச்சி நிலையங்களின் செலவினம் ரூபா 35,944,277 ஆல் அதிகரித்திருந்தமையே இந்த நிதி விளைவுகளில் ஏற்பட்ட பின்னடைவிற்கு பிரதானமாக தாக்கமளித்த காரணிகளாகும்.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் முன்னைய ஆண்டின்: 1:1.35 இலிருந்து மீளாய்வாண்டில் 1:1.42 வரையிலும் விரைவு விகிதம் 1:0.96 இலிருந்து மீளாய்வாண்டில் 1:1.04 வரையிலும் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டின் 5.04 சதவீதமான இலாப விகிதம் 11.25 சதவீத நட்டமாக மாற்றமடைந்திருந்தது. தேங்காய் மற்றும் தென்னங் கன்றுகளின் விற்பனை குறைவடைந்தமை இதற்கான பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தெங்கு பயிர்ச்செய்கையின் போது ஆடுகளை வளர்க்கும் ஆராய்ச்சிக் காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,121,678 செலவிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்திற்குப் பொறுப்பாக விருந்த உத்தியோகத்தர் பதவி வறிதாக்கப்படுகையில் இந்த ஆராய்ச்சிக்குரிய தகவல்களை சபைக்குக் கையளித்திருக்கா மையால் அச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது போயிருந்தது. | இந்த ஆராய்ச்சியினை வேறொரு விதத்தில் மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை ஆரம்பிக் கப்பட்டுள்ளதுடன், இந்த ஆராய்ச் சிக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி ஆடுகள் மற்றும் செம்பறிக் கொட்டில்களிற்கு நீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், தெங்கு செய்கையில் களைகளைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த கால்நடைகளை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என ஆராய்வதற்காக பெடொக் முறை யின் கீழ் கால்நடைகளை ஈடுபடுத்துதல் தொடர்பில் ஆராய்ச் சியினை மேற்கொள்வதற்கு நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக இந்த ஆராய்ச்சியின் நிமித்தம் கொள்வனவு செய்யப்பட்ட கம்பிக ளும் குளாய்களும் பயன்படுத்தப்பட் டுள்ளன. | குறித்த ஆராய்ச்சிச் செயற்திட்டத்தை உரிய காலத்தில் முடிப்பதற்கு நடவடி க்கை எடுப்பது அந்த ஆராய்ச்சிக்குப் பொறு ப்பான உத்தியோகத் தரின் கடமையாவ துடன் அந்தப் பொறுப் பினை நிறைவேற்றா மைக்காக நடவடிக்கை எடுத்தல் முகாமைத் துவத்தின் பொறுப்பாக உள்ளது. |
| (ஆ) வரட்சியான காலநிலை காரணமாக விதை உற்பத்தி குறைவடைதலைக் கருத்திற்கொண்டு தேவையான தண்ணீரை வழங்குவதற்கு போதிய நீர்ப்பாசன முறைமையினைத் தாபித்து புதிய தெங்கு இனங்களின் மூலம் விளைச்சலை அதிகரிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்ப ட்டிருக்காமையால் 2017 ஆம் ஆண்டிற்கான 1,107,642 விதை உற்பத்தி 2018 ஆம் ஆண்டில் 828,070 வரை குறைவடைந்திரு ந்தது. | விதை உற்பத்தியும் சராசரி தேங்காய் விளைச்சலும் வேறுபட் டுள்ளமை காண்பிக்கப்படுகின்றது. தேங்காய் விதை பூங்காவிற்காக 2017 ஆம் ஆண்டில் நீர் வழங்கல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட துடன், தற்போது மாதுறுஓய தெங்கு விதை பூங்காவினை உள்ளடக்கிய விதத்தில் நீர் வழங்கல் முறைமை தாபிக்கப்பட்டுள்ளது. லேகம்ப மற்றும் பல்லமஜான மூலவள நிலையங்களில் நீர் வழங்கல் முறைமை தாபிக்கப்பட்டுள்ள போதிலும், அனைத்து தேங்காய் பூங்காக்களையும் உள்ளடக்குவதற்கு அதிக பணத்தை செலவிட வேண்டியுள்ளது. எதிர்காலத்தில் | போதிய நீர் கிடைக் காமை காரணமாக தேங்காய் விளைச்சல் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்ற தோட் டங்களிற்காக நீர்ப்பா சன முறைமையினை தாபிப்பதற்குத் தேவை யான நடவடிக்கை களை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இந்த இரண்டு தேங்காய் விதைப் பூங்காக்களையும் முழுமையாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) மீளாய்வாண்டில் பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டு ரூபா 11,925,500 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 07 செயற்திட்டங்களின் பௌதீகச் செயலாற்றல் 45 சதவீதம் முதல் 80 சதவீதத்திற்கு இடைப்பட்டதாக காணப்பட்டது. ஆராய்ச்சி உத்தியோ கத்தர்களின் பற்றாக்குறை, ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் பதவி விலகுதல், இரசாயணப் பொருட்கள் கிடைக்காமை மற்றும் இரசாயண உபகரணங்களை கொள்வனவு செய்வதில் காணப்படும் தாமதங்கள் இதற்கான பிரதான காரணங்களாக இருப்பினும், இது தொடர்பில் முகாமைத்துவத்தினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை, ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் நிறுவனத்திலிருந்து விலகி பல்கலை க்கழகங்களில் இணைதல், புதிதாக சேர்த்துக் கொள்ளப்படுகின்ற உத்தியோகத்தர்கள் குறுகிய காலத்தில் வேறு தொழில்களை நாடிச் செல்லல் போன்றன ஆராய்ச்சிச் செயற்திட்டங்களின் பௌதீகச் செயலாற்றல் குறைவ டைவதற்கு காரணங்களாகும். இந்த நிலைமையை மாற்றுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கை களும் எடுக்கப்படும். | ஆராய்ச்சி செயற்திட் டங்களின் பௌதீகச் செயலாற்றல் குறை வடைவதற்கான கார ணங்களைக் கண்டறி ந்து அதற்குத் தேவை யான நடவடிக்கை களை துரிதமாக எடுத்தல் வேண்டும். |
| (ஈ) வரட்சியான காலநிலையின் கீழ் தென்னை மரத்தின் விளைச்சலை சீராக பேணிச்செல்வதற்குத் தேவயைாகவுள்ள மண்ணில் உயிர்வாழும் நுண்ணங்கிகளை இனங்காணும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட Isolation & Identification of Vascular Arbuscular Mycorrhizae (VAM) From Coconut Land செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 273,000 செலவிடப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டில் பூரணப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இச்செயற்திட்டத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் வெளிநாடு சென்றுள்ளமையால் மீளாய்வாண்டில் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், அந்த உத்தியோகத்தருக்குப் பதிலாக வேறொரு | இச்செயற்திட்டத்திற்குப் பொறுப்பான பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர் பட்டப்பின் படிப்பிற்காக 2018 இன் நடுப்பகுதியில் வெளிநாடு சென்றுள்ளார். அத்துடன், இந்த ஆராய்ச்சி நுண்ணங்கிகள் குறித்த ஆராய்ச்சியாக காணப்படுவதனால் அதற்காக விசேட நிபுணத்துவ அறிவு தேவைப்படுகின்றமையால் 2018 இன் நடுப்பகுதியிலிருந்து அவ்வாறான விசேட அறிவுத்திறன் கொண்ட ஒருவர் கிடைக்காமையால் மையால் இந்த ஆராய்ச்சி தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளது. | ஆராய்ச்சி செயற்திட் டத்திற்குப் பொறுப் பான உத்தியோகத்தர் வேறுபடுகையில் ஆரா ய்ச்சி நடவடிக்கை நிறுத்தப்படுதலை தவிர்க்கும் விதத்தில் அதனை தொடர்ந்து மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தரைப் பயன்படுத்தி ஆராய்ச்சியினை தொடர்வதற்கு சபைக்கு முடியாது போயிருந்தது. | | |
| (உ) 1992–2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநாடு சென்று சேவைக்குச் சமூகமளிக்காதுள்ள 09 வெளிநாட்டு புலமைப்பரிசு தாரர் களிடமிருந்து உடன்படிக்கையின் பிரகாரம் சபைக்கு அறிவிடப்பட வேண்டியுள்ள ரூபா 28,588,853 தொகையினை உரிய உத்தியோகத் தர்களிடமிருந்து அறவிடுவதற்கு முடியாது போயிருந்தது. | 1992-2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநாடு சென்று சேவைக்குச் சமூகமளிக்காதுள்ள மற்றும் பிணைமுறிகளை முறித்துக் கொண்டு பதவி விலகிய 09 நபர்களிடமிருந்து உடன்படிக்கையின் பிரகாரம் சபைக்கு அறிவிடப்பட வேண்டியுள்ள ரூபா 28,588,853 தொகையினை உரிய உத்தியோகத் தர்களிடமிருந்து அறவிடுவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வழக்கினை துரிதமாக நிறைவுசெய்து குறித்த தொகையினை விரை வாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) 03 வருட காலத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி கொதலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கும் பேராதனை பல்கலைக்கழகத்திற்கும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக வழங்கியிருந்த முறையே ரூபா 989,601 மற்றும் ரூபா 2,156,153 முற்பணங்கள் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், அந்த முற்பணங்களை தீர்ப்பதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பேராதனை பல்கலைக்கழகத் துடனான புரிந்துணர்வு உடன்படிக் கையுடன் தொடர்புடைய ஆராய்ச்சிச் செயற்திட்டத்தை உரிய காலத்தில் பூரணப்படுத்த முடிந்திருக்கவில்லை. இந்த ஆய்வின் முதலாம் கட்டத்தை கணக்கெடுப்பொன்றின் மூலம் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட் டிருந்ததுடன், அதற்குப் பொருத்த மான கணக்கெடுப்பை தெரிவு செய்கையில் எதிர்பாராத காலம் எடுத்திருந்தது. ஆகையால், எதிர்பார்த்த காலத்தில் பூரணப்படுத்த முடியாது போயிருந்ததுடன், இந்த ஆய்வின் பெறுபேறு தெங்கு கைத்தொழிலின் மேம்பாட்டிற்கு பங்களிக்கும் என்பதனால் அதனைப் பூரணப்படுத்துதல் முக்கியமானதாக உள்ளது. ஆகையால் புரிந்துணர்வு உடன்படிக்கைக் காலத்தை நீடித்து வேலைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆதலால், முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | புரிந்துணர்வு உடன்படிக்கைக் காலத்தில் ஆராய்ச்சி செயற்திட்டங்களை துரிதமாக செய்து முடிப்பதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொதலாவல பாதுகாப்புக் கல்லூரியுடன் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையுடன் தொடர்புடைய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்த ஆய்வின் மூலம் தெங்குக் கைத்தொழிலின் மேம்பாட்டிற்காக காணப்படுகின்ற முக்கியத்துவத் தினைக் கருதி உடன்படிக்கைக் காலத்தை மேலும் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அதன் காரணமாக முற்பணம் தீர்க்கப்படவில்லை. | |
| (எ) | 2018 பெப்ரவரி மாதம் பதிவழிப்புச் செய்யப்பட்ட ரத்மலாகார ஆராய்ச்சி நிலையத்திற்குச் சொந்தமான ரூபா 3,428,678 தொகையான மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 112 தேக்கு மரங்கள் விற்பனை செய்யப்படாது இத்துப்போகும் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. | ரத்மலாகார தோட்டத்திற்கு உரித்து றுதியும் நிலஅளவை வரைபடமும் காணப்படுகின்றது. இருப்பினும், ஆரம்பத்தில் இதற்கான உரித்து றுதியை சமர்ப்பிக்கையில் சரியான உறுதியின் பதிவிலக்கத்திற்குப் பதிலாக உறுதியில் காணப்பட்ட வேறொறு இலக்கம் சமர்ப்பிக்கப் பட்டமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. | குறித்த காணியினை உரிமையினை உறுதி ப்படுத்துவதற்கு முன்னர் மரங்களை வெட்டுவதற்கு தீர்மானம் மேற்கொண்ட உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண் டும். |